**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 325/2023**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மாதவன் | **Caste** | : |
| **Father's Name** | : முத்தையா | **Calling** | : நகை அடகு கடை |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 55 |
| | | **Dated** | : **11.03.2025** |

**11.03.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திரு. **மாதவன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1,2 எதிரிகள் இறப்பு**

**3,4,5 எதிரிகள் ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் NGO காலனியில் குடியிருந்து அம்மன் பேங்கர்ஸ் என்ற பெயரில் நகை அடகு கடை வைத்துள்ளேன். எதிரி முகமது சாதிக்கை தெரியும். கடந்த 25.07.2015 ம் தேதி எங்களது கடைக்கு வந்து முகமது சாதிக் இரண்டு வளையல்களை ரூ. 31,500/–க்கு அடகு வைத்தார். அடுத்த சில தினங்களில் 2 வளையல்களை ரூ. 40,000/–க்கு அடகு வைத்தார். அடுத்த சில தினங்களில் 4 வளையல்களை ரூ. 70,000/–க்கு அடகு வைத்தார். அடுத்த சில தினங்களில் 2 வளையல்களை ரூ. 40,000/–க்கு அடகு வைத்தார். முகமது சாதிக் அடகு வைத்த நகைகளை உரசிப் பார்த்தபோது செம்பு வந்துவிட்டது. அதனால் அவர் அடகு வைத்த எல்லா வளையல்களையும் எடுத்து சரிபார்த்தபோது அவர் வைத்த எல்லா வளையல்களும் போலியான வளையல்களாக இருந்தது. மேற்படி முகமது சாதிக் மற்ற கடைகளிலும் போலியான நகைகளைக்காட்டி அடகு

வைத்திருப்பதாக மல்லிகா பேங்கர்ஸ் ஆகிய கடைகளில் நகை அடகு வைத்ததாக தெரியவந்தது. முகமது சாதிக்கை நேரடியாக அழைத்து பேசினேன். அதற்கு முகமது சாதிக் நான் உங்கள் வரவு செலவுகளை முடித்துவிடுகிறேன் என்று சொன்னார். ஆனால் அவர் சொன்னபடி வரவில்லை. அதன்பின்னர் நான் தாலுகா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அதன்பின்னர் இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள். இவ்வழக்கில் பிரபாகரன், விஜயகுமார், பாலன், ராமு ஆகியோர்கள் முகமது சாதிக் உடன் சேர்ந்து சம்பவத்தில் ஈடுபட்டதாக போலீசார் விசாரித்து சொன்னார்கள். அவர்களை நான் பார்த்தது இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் விசாரணையின்போது முகமது சாதிக் எங்கள் கடையில் அடகு வைத்த வளையல்களை நான் போலீசில் ஆஜர் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வளையல்களைத்தான் முகமது சாதிக் எங்களது கடையில் அடகு வைத்தார். (**புகைப்படம் மற்றும் குறுந்தகடு அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

23.10.2015ம் தேதி நான் தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். புகாரை நான் எழுதினேனா அல்லது போலீசார் எழுதினார்களா என்றால் நான்தான் கைப்பட எழுதினேன். அம்மன் பேங்கர்ஸ்என்ற நிறுவனத்திற்கு நான் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அதை இவ்வழக்கில் புகாருடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது புகாரிலும் 161 வாக்குமூலத்திலும் எந்தெந்த தேதிகளில் எதிரிகள் நகை அடகு வைத்ததாக குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். 25.07.2015, 27.07.2015,29.07.2015, 29.08.2015 ஆகிய 4 தேதிகளிலும் முகமது சாதிக் என்பவர்தான் நகை கொண்டுவந்து அடகு வைத்தாரா என்றால் ஆம். 4 தேதிகளிலும் முகமது சாதிக் என்பவருக்குதான் நான் ரசீது போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான். நகையை அடகு வைக்கும் ஒரு நபர் அதற்கான விண்ணப்பத்தில் நாமினியாக ஒருவரை சேர்க்கவேண்டும் என்றால் எனக்குத் தெரியாது. எனது புகாரில் 27.07.2015 அன்று பிரபாகரன் என்பவரும், விஜயகுமார் என்பவரும் நகையை அடகு வைப்பதற்கு உடன் வந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 10

வருடங்கள் ஆனதால் எனக்கு ஞாபகம் இல்லை. அடமான கடையில் நான் CCTV கேமரா பொருத்தியிருந்தேன் என்றால் சரிதான். அந்த CCTV பதிவுகளை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. CCTV கேமரா பதிவுகளை போலீசார் ஆய்வு செய்தார்களா என்றால் இல்லை, நான்தான் பார்த்தேன். CCTV கேமரா பதிவில் யார் வந்தார்கள் என்று நான் சரியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் முகமது சாதிக்கை மட்டும்தான் தெரியும் என்று சொல்லிவிட்டு CCTV பதிவில் மற்றொரு நபரும் உடன் வந்தவரை நான் பார்த்தேன் என்று முரண்பட்டு சாட்சியம் அளிப்பதால் நான் பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**4,5 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் 4 ம் எதிரி ராமு, 5 ம் எதிரி பாலன் ஆகியோர்கள் யார் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். 4,5 எதிரிகள் என்னுடைய கடைக்கு அடகு வைக்க வரவில்லை என்றால் சரிதான். நான் 4,5 எதிரிகள் பற்றி புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஒருவர் நகையை அடகு வைத்து வரும்போது அடகு வைத்ததற்காகன ரசீதின் அசலை அடகு வைப்பவருக்கும், நகலை நாங்கள் வைத்துக் கொள்வோம் என்றால் சரிதான். எதிரி அடகு வைத்ததற்கான நகலை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல, ஒப்படைத்துள்ளேன். இவ்வழக்கின் 1 ம் எதிரி எந்த நகையும் என்னிடம் அடகு வைக்கவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிரி யார் என்று 4,5 எதிரிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. 4,5 எதிரிகள் என்னை ஏமாற்றவில்லை, எந்த மோசடியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும், 4,5 எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.03.11 00:27:41 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 325/2023**

**Prosecution Witness :2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுந்தரம் | **Caste** | : |
| **Father's Name** | : வள்ளியப்பன் | **Calling** | : நகை அடகு கடை |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 56 |
| | | **Dated** | : 11.03.2025 |

**11.03.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–3 திரு.சுந்தரம் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1,2 எதிரிகள் இறப்பு**

**<u>3,4,5 எதிரிகள் ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**

1. நான் திண்டுக்கல் MVM நகரில் குடியிருந்து வள்ளியப்பா பேங்கர்ஸ் என்ற பெயரில் நகை அடகு கடை வைத்துள்ளேன். எதிரி முகமது சாதிக்கை தெரியும். 28.07.2015 ம் தேதி எதிரி முகமது சாதிக் எங்கள் கடைக்கு வந்து 2 வளையல்களை ரூ. 31,000/–க்கு அடகு வைத்தார். அதன்பின்னர் 31.08.2015 ம் தேதி 2 வளையல்களை ரூ. 33,000/–க்கு அடகு வைத்து பணம் வாங்கினார். எனக்கு முகமது சாதிக் கொடுத்த வளையல் மீது சந்தேகம் ஏற்பட்டு அதை நான் 2 இடத்தில் சரிபார்த்தேன். சரிபார்த்தபோது போலியானது என்று தெரியவந்தது. இந்த விசயத்தை முகமது சாதிக்கிடம் போனிலும், நேரிலும் அழைத்து சொன்னேன். முகமது சாதிக் அதற்கான தொகையை என்னிடம் கொடுத்துவிடுவதாக சொன்னார். பணத்தை கொடுக்கவில்லை. 2 மாதம் டைம் கொடுத்து பார்த்தேன். ஆனால் அவர் பணம் கொடுக்கவில்லை. இது சம்மந்தமாக விசாரித்தபோது

முகமது சாதிக் வேறு அடகு கடைகளிலும் விசாரித்தபோது போலியான நகையை கொடுத்து பணம் பெற்றுச் சென்றது தெரியவந்தது. எனவே இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க அம்மன் பேங்கர்ஸ்சை சேர்ந்த மாதவன் மூலமாக புகார் கொடுத்தோம். போலீசார் விசாரித்தார்கள். போலீசார் முகமது சாதிக்கை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். முகமது சாதிக்கை போலீசார் விசாரித்தபோது விஜயகுமார், பாலு, ராமன், பிரபாகரன் ஆகியோர்தான் மேற்படி நகையை கொடுத்து அடகு வைக்க சொன்னதாக சொன்னார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வளையல்களை முகமது சாதிக் எங்கள் பேங்கில் அடகு வைத்திருந்தார். அதை நான் காவல் நிலையத்தில் போலீசாரிடம் ஒப்படைத்தேன். (**அதன் புகைப்படம், குறுந்தகடு அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். (**1 வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

28.07.2015ம் தேதி முதல் தற்பொழுதுவரை நான் MVM நகரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது 161 விசாரணையிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் கூட்டுறவு நகரில் குடியிருந்து வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. Pawn Brokers Act 1943 ன் படி நான் நகை அடகு கடை நடத்த வேண்டும் எனில் உரிமம் பெறவேண்டும் என்றால் சரிதான். எங்கள் நகை அடமான கடையில் அப்ரைசர் உள்ளாரா என்றால் ஆண்டனி என்ற அப்ரைசர் உள்ளார். மேற்படி அப்ரைசர் நகையை சரிபார்த்த பிறகுதான் நான் அடகுக்கு எடுத்தேன் என்றால் சரிதான், ஆனால் நகையை அடகு வைக்க வந்த எதிரி வளையலில் கனம் ஏற்றியிருந்தார். 2வது முறை அடகு வைக்க வரும்போது கனம் ஏற்றியிருந்தாரா என்றால் 2ம் முறைதான் கனம் ஏற்றியிருந்தார், 1வது முறை நாங்கள் செக் பண்ணவில்லை. 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் 1ம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். நான் காவல் நிலையத்தில் எதிரிகளை பார்க்கவில்லை என்றால் முகமது சாதிக்கை மட்டும் எனக்குத் தெரியும். மற்ற எதிரிகளை போலீசார் காவல் நிலையத்தில் காட்டினார்கள் என்றால் இல்லை, முகமது சாதிக்கை மட்டும்தான் பார்த்தேன். காவல்நிலையத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல, காவல் துறையினர் கொடுத்த

பேப்பரில் கையொப்பம் செய்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4,5ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ம் எதிரி எங்கள் கடையில் அடகு வைத்ததற்கு நான் தனியாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் 10 வருடம் ஆனதால் எனக்குத் தெரியவில்லை. 1ம் எதிரி என்ன ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்பொழுது நான் காவல் நிலையத்தில் இருந்தேனா என்றால் இருந்தேன், சற்று தூரமாக இருந்தேன். நான் தூரமாக இருந்ததால் 1ம் எதிரி என்ன சொன்னார் என்று எனக்குத் தெரியவாய்ப்பில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நாள் நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கு 4,5 எதிரிகள் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. 4,5 எதிரிகள் எங்கள் கடையில் நகை அடகு வைக்கவில்லை என்றால் சரிதான், அவர்களை எனக்கு யார் என்று தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் 4,5 எதிரிகளுக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கேட்டுக் கொண்டதால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW
Digitally signed by SOUMYA MATHEW
Date: 2025.03.11 00:27:49 +0530

Judicial Magistrate No.I
Dindigul.